# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண்–37
## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

## அறிவிப்புகள்
## 2018–2019

**பி. தங்கமணி**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2018

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

### மானியக் கோரிக்கை எண்–37

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அறிவிப்புகள் 2018 – 2019

**1. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபானத் தொழிலில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்**

**Providing Assistance for Rehabilitating persons who have been weaned away from illicit distillation and illicit liquor trade**

தமிழ்நாட்டில், கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் அதன்மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலும் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு

மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி, மனம் திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தொழிலைத் தொடராமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும், **2011–2012–**ஆம் ஆண்டு முதல் ரூ.**5.00** கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டிலும், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.5.00 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்படும்.**

## 2. குடிப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

## Conducting Awareness Campaigns against Consumption of Liquor

குடிப்பழக்கத்திற்கு மக்கள் அடிமையாகாமல் இருக்கவும், அவ்வாறு குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள், அப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனும், குடிப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ள, மாவட்டந்தோறும் போலி மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப்பற்றி, விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்த, 2011–ஆம் ஆண்டு முதல் ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியானது,

2015–2016–ஆம் ஆண்டு முதல் ரூ.3.00 கோடியாக உயர்த்தப்பட்டது. மேலும், 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018–ஆம் ஆண்டுகளில் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியாண்டிலும், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 3. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்

## Pay increase for TASMAC Retail Vending Personnel

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் (டாஸ்மாக்) 26,463 சில்லறை விற்பனைப் பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் தொகுப்பு ஊதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். டாஸ்மாக் நிறுவனத்தில் பணியாற்றும் சில்லறை விற்பனை பணியாளர்களான மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு, 2011, 2012, 2013, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆகிய ஏழு ஆண்டுகளிலும் முறையே ரூ.500/–, ரூ.400/– மற்றும் ரூ.300/– என ஒவ்வொரு ஆண்டும்

தொகுப்பு ஊதியமானது உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு, **மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு மாத தொகுப்பு ஊதியம் முறையே ரூ.750/– ரூ.600/– மற்றும் ரூ.500/– என உயர்த்தி வழங்கப்படும். இந்த ஊதிய உயர்வுகள், செப்டம்பர் 2018 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதனால் டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரியும் 7,287 மேற்பார்வையாளர்களும், 15,532 விற்பனையாளர்களும் மற்றும் 3,644 உதவி விற்பனையாளர்களும் பயன்பெறுவர். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு **கூடுதலாக ரூ.19.93 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 4. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை பணியாளர்களுக்கு குடும்ப நல நிதி (குழு காப்பீட்டுத் திட்டம்) உதவித் தொகையை ரூ.1.50 இலட்சத்தில் இருந்து ரூ.3.00 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்

**Enhancement of benefit from Family Benefit Fund (Group Insurance Scheme-GIS) from Rs.1.50 lakhs to Rs.3.00 lakhs**

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் சில்லறை விற்பனைப் பணியாளர்கள் தொகுப்பு ஊதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். இதில் மரணம் அடைந்த பணியாளர்களின் குடும்பத்தாருக்கு ரூ.1.50 இலட்சம், குடும்ப நல நிதி (குழு காப்பீட்டுத் திட்டம்)—யிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, ஒவ்வொரு மாதமும் ரூ.30/— பணியாளர்களின் தொகுப்பு ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த ஆண்டு முதல், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின்**

**நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** குடும்பநல நிதியிலிருந்து வழங்கப்படும் உதவித்தொகையானது **ரூ.1.50** இலட்சத்திலிருந்து ரூ.**3.00** இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக பணியாளர்களின் தொகுப்பு ஊதியத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் ரூ.**60/–** பிடித்தம் செய்யப்படும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு **கூடுதலாக ரூ.1.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**5. மதுவிலக்கு அமலாக்கப்பிரிவின் 24 சோதனைச் சாவடி வாகனங்களின் மேற்புறத்தில் பொருத்துவதற்கு புகைப்படக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்**

**Providing top mounted Cameras & Accessories for the 24 check post vehicles of Prohibition Enforcement Wing.**

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவுக்கு 24 சோதனைச் சாவடி வாகனங்கள் உள்ளன. சாலைகளின் வழியாக கள்ளச்சாராயம், தெளிந்த சாராவி, போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள் கடத்தப்படுவதைக் கண்டுபிடிக்கவும், மாநிலத்தின் எல்லையோரப் பகுதிகளில் இது சம்பந்தமான கண்காணிப்பை மேம்படுத்தவும், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு சோதனைச் சாவடி வாகனங்களின் மேற்புறத்தில் பொருத்த,

இரவுப் பார்வையுடன் (Night vision) கூடிய புகைப்படக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கும், மேலும் சோதனைச் சாவடி வாகனங்களைக் கண்காணிக்க நவீன கட்டுப்பாட்டு அறை அமைக்கவும், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.43.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**6. தெளிந்த சாராவி, போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபான வகைகள் கடத்தல்களை கண்டுபிடித்து கைப்பற்றும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலுவலர்களுக்கும் மற்றும் அவர்களுக்கு உதவும் உள்ளூர் காவலர்களுக்கும் பண வெகுமதிகள் வழங்குவதற்கான ஊக்கநிதித் திட்டம் உருவாக்குதல்**

**Incentive Scheme for giving Monetary rewards to Prohibition Enforcement Wing Officials and local police who help in seizure of smuggled Rectified Spirits, spurious and non-duty paid liquor.**

தமிழ்நாட்டில், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவின் கீழ் 96 அலகுகள் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் இயங்குகின்றன. தெளிந்த சாராவி கடத்தல்கள், போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபான வகைகள் கடத்தல்களைக் கண்டுபிடித்துக் கைப்பற்றும் இந்த அலகுகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் அவர்களுக்கு உதவும் உள்ளூர் காவலர்களை

ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு பண வெகுமதிகள் வழங்குவதற்கு ஊக்கநிதித் திட்டம் ஒன்று உருவாக்கி, செயல்படுத்த **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**பி. தங்கமணி**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்